


**10.06.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. நாட்டில் கடந்த 11 ஆண்டுகளாக பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் நவீன மயத்திற்கும் தன்னிறைவிற்கும் உயர் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க முனைப்பான திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

3. மக்கள் நலனை முன்னிறுத்தியே பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான ஆட்சி நடைபெறுவதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மேம்பாட்டிற்கு உலக வங்கி உறுதுணையாக உள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. தமிழ்நாட்டில் வரும் 19-ம் தேதி நடைபெறும் மாநிலங்களவை தேர்தலுக்கு திமுக அஇஅதிமுக சார்பில் தாக்கல் செய்யப்பட்ட 6 வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

<u>பிரதமர்</u>

நாட்டின் பாதுகாப்புத்துறை கடந்த 11 ஆண்டுகளில் மாபெரும் மாற்றங்களுடன் பெரும்வளர்ச்சி கண்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் நவீனமயம் மற்றும் தன்னிறைவிற்கு அதிக கவனம் செலுத்தப்பட்டதாக தமது சமூகவலைதள பதிவில் பிரதமர் கூறியுள்ளார்.

தேசத்தை வலுப்படுத்துவதில் நாட்டு மக்கள் ஒருங்கிணைந்து செயலாற்ற உறுதிபூண்டுள்ளது குறித்து பிரதமர் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

**********

<u>ராஜ்நாத்சிங்</u>

இதனிடையே பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் பாதுகாப்புத்துறை வரலாற்று சிறப்புமிகு மாற்றங்களுடன் முன்னேறியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தமது சமூகவலைதள பதிவில் கூறியுள்ளார்.

எல்லைபகுதிகளை வலுப்படுத்தியது, முப்படைகளின் நவீனமயம், உள்நாட்டு தளவாட உற்பத்தி, ராணுவ ஆயுதங்கள் ஏற்றுமதி, உலகின் நம்பகதன்மையை பெற்றுள்ளது போன்றவை சுய சார்பு பாரதத்தை முன்னெடுத்து செல்வதாக திரு.ராஜ்நாத்சிங் சுட்டிக்காட்டியுள்ளார்.

**********

கஜேந்திரசிங் ஷெகாவத்

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு நம்பிக்கையின் வழிகாட்டியாக உருவெடுத்துள்ளது என்று மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

சென்னையில் மத்திய அரசின் 11 ஆண்டுகால சாதனை புத்தகத்தை இன்று வெளியிட்டு பேசிய அவர், பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி இந்தியா பயணிப்பதாக தெரிவித்துள்ளார்.

சேவை, நல்லாட்சி, ஏழை மக்களுக்கான நல திட்டங்களுக்கு உயர் முன்னுரிமையுடன் வளர்ச்சி பாதையில் முன்னேறி செல்வதாக எடுத்துரைத்தார்.

அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் ஒரு முழுமையான அணுகுமுறையுடன் பல்வேறு நல திட்டங்களை அரசு செயல்படுத்துவதாக குறிப்பிட்டார்.

நாட்டிற்கு இது பொற்காலம் என்று கூறியுள்ள அவர் ஆபரேசன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம் பயங்கரவாதத்திற்கு தக்க பதிலடி கொடுக்கப்பட்டதாக எடுத்துரைத்தார்.

கோவிட் காலத்தில் இரண்டு தடுப்பு மருந்துகளை உருவாக்கி உலக நாடுகளுக்கு மருந்து விநியோகித்த நாடாக இந்தியா உருவெடுத்ததாக குறிப்பிட்டார்.

**********

முருகன்

நாடு கடந்த 11 ஆண்டுகளாக நல்லாட்சி மற்றும் வளர்ச்சியுடன் முன்னேறி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் 11 ஆண்டுகள் நிறைவை ஒட்டி புதுச்சேரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மக்கள் நலத்தை முன்னிறுத்தியே பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான ஆட்சி நடைபெறுவதாக குறிப்பிட்டார்.

4-ஆவது பெரிய பொருளாதார நாடாக முன்னேறியுள்ள நம் தேசத்தில் கடந்த 11 ஆண்டுகளில் 27 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

ஆபரேசன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையில் உள்நாட்டு பாதுகாப்பு உற்பத்தி தொழில்நுட்பம் வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டதை எடுத்துரைத்த டாக்டர் எல்.முருகன் நக்சல் தீவிரவாதம் பெருமளவில் குறைந்ததோடு, மகளிர் ஆளுமை விவசாய நல திட்டங்கள் உள்ளிட்டவற்றையும் பட்டியலிட்டார்.

வாய்ஸ்

**********

நித்யானந்த ராய்

உலகளாவிய அமைதிக்கும் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பயங்கரவாதம் மிகப்பெரிய அச்சுறுத்தல் என்று மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு.நித்யானந்த ராய் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 23ஆவது தேசிய பாதுகாப்பு காவல்படையின் சர்வதேச கருத்தரங்கை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், பயங்கரவாதத்தை எதிர்கொள்ள உலக நாடுகள் ஆக்கப்பூர்வமாகவும், வலிமையுடனும் ஒருங்கிணைவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் பதிலடி நிலைப்பாடுகள் குறித்து தேசிய சர்வதேச நிபுணர்கள் விவாதிக்கின்றனர்.

**********

மத்திய அரசின் 11 ஆண்டுகள் சிறப்பு செய்தி தொகுப்பு

சேவை, நல்லாட்சி, ஏழை எளிய மக்களுக்கான நல திட்டங்களுடன் இந்தியா முன்னேற்றப்பாதையில் பயணித்து வருகிறது.

பாதுகாப்புத்துறையில் தன்னிறைவுடன் இந்தியா ஆற்றல் மிகு நாடாக உருவெடுத்துள்ளது.

2016ஆம் ஆண்டு துல்லிய தாக்குதல் தொடங்கி 2025ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆபரேசன் சிந்தூர் ராணுவ தாக்குதல்வரை, தேச பாதுகாப்பு அச்சுறுத்தலை இந்தியா சகித்துக்கொள்ளாது என்ற செய்தி தெளிவாக நிலைநாட்டப்பட்டுள்ளது.

ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கை தீவிரவாதத்திற்கான இந்தியாவின் தக்க பதிலடி நடவடிக்கையையும், ஒருங்கிணைக்கப்பட்ட துல்லிய தாக்குதல் மூலம் தீவிரவாதிகளின் 9 முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டதையும் உலகத்திற்கு வெற்றியுடன் பறைசாற்றுகிறது.

2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ராணுவ தளவாட உற்பத்தி ஏற்றுமதி 34 மடங்கு அதிகரித்துள்ளதோடு 5 ஆயிரம் பொருட்கள் தற்போது உள்நாட்டு உற்பத்தி பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

2025 – 26-ம் நிதியாண்டில் ராணுவ தளவாடங்கள் கொள்முதலுக்கு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் 75 சதவிகிதம் உள்நாட்டு உற்பத்திக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைகளால் பாதுகாப்புதுறையில் புதிய சகாப்தத்தை படைத்து வலிமையுடனும் தன்னிறைவுடனும் இந்தியா முன்னேற்றப்பாதையில் பயணிக்கின்றது.

**********

<u>முதலமைச்சர்</u>

தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மேம்பாட்டிற்கு உலக வங்கி உறுதுணையாக உள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை தரமணியில் உலக வங்கியின் சார்பிலான நவீன உலகளாவிய வணிக மையத்தை இன்று திறந்துவைத்து பேசிய அவர், வறுமை ஒழிப்பு திட்டங்களுக்கு உலக வங்கி பெரிதும் பங்களித்துவருவதாக குறிப்பிட்டார்.

மக்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களுக்கு கடனுதவி அளித்து வருவதாகவும் முதலமைச்சர் கூறினார்.

வாய்ஸ்

முன்னதாக சென்னை மெட்ரோ ரயில் நிலையத்தில் ஒருகோடியே 85 லட்ச ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள புத்தகபூங்காவையும் முதலமைச்சர் திறந்துவைத்தார்.

பொது நூலக இயக்ககம் சார்பில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களிலும் கட்டப்பட்டுள்ள 110 நூலக கட்டிடங்கள் 70 சிறப்பு நூலகங்களையும் முதலமைச்சர் துவக்கிவைத்தார்.

தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் விற்பனைக்கான மின் வணிக இணையதளத்தை துவக்கிவைத்ததோடு, 84 நூல்களையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

**********

<u>சிவகங்கை</u>

தமிழகம் முழுவதும் சுதந்திர போராட்ட தியாகிகளை போற்றும் வகையில், திருவுருவ சிலைகள் அமைக்கப்பட்டு அவர்தம் பிறந்தநாள் அரசு விழாவாக கொண்டாடப்படுவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் நகரம்பட்டி கிராமத்தில் சுதந்திரபோராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்தின் பிறந்தநாளையொட்டி, அன்னாரது திருவுருவ சிலைக்கு அமைச்சர் இன்று, மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.

சிவகங்கையில் இன்றுமாலை நடைபெறும் நிகழ்ச்சியில், 300க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுக்கு நலவாரிய அட்டைகளையும், நலத்திட்ட உதவிகளையும் அமைச்சர் வழங்க உள்ளார்.

**********

## மாநிலங்களவை தேர்தல்

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள ஆறு மாநிலங்களவை இடங்களுக்கு வரும் 19-ம் தேதி நடைபெறும் தேர்தலுக்கு திமுக மற்றும் அஇஅதிமுக சார்பிலான 6 வேட்பாளர்களின் வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

வேட்பு மனு பரிசீலனை இன்று நடைபெற்றதில் திமுக வேட்பாளர்கள் திரு. பி.வில்சன் கவிஞர் சல்மா, திரு.சிவலிங்கம்,

மக்கள் நீதி மய்யம் வேட்பாளர் திரு.கமலஹாசன்

அஇஅதிமுக வேட்பாளர்கள் திரு. ஐ.எஸ். இன்பதுரை, திரு. எம்.தனபால் ஆகிய 6 பேரின் வேட்பு மனுக்களும் ஏற்கப்பட்டன.

மனுக்களை விலக்கி கொள்ள நாளை மறுநாள் கடைசிநாளாகும்.

**********

## இருவரி

நாமக்கல் மாவட்ட கால்நடை மருத்துவ கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் நெகிழி இல்லா நாமக்கல் மற்றும் உலக சுற்றுச்சூழல் தின சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது.

நாகை வேதாரண்யம் தலைஞாயிறு கீழையூர் கீழ்வேளூர் திருமருகலில் நடைபெறும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய நடைபெறும் சிறப்பு முகாம்களை பயன்படுத்திக்கொள்ள ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் கேட்டுக்கொண்டார்.

கரூர் மாவட்டம் வாங்கல் குப்புச்சிபாளையத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாமின் ஒருபகுதியாக நாளை மருத்துவ முகாம் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.தங்கவேல் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மத்திய அரசின் வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார விழிப்புணர்வு நிகழ்ச்சியில் விவசாய திட்டங்கள் குறித்து மக்களிடையே எடுத்துரைக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம் கூடலூர் உள்ளிட்ட சுற்றுவட்டார குடியிருப்புகளுக்குள் காட்டு யானைகள் நுழைந்தால் வனத்துறையினருக்கு தகவல் அளிக்குமாறும், அருகில் செல்லவோ, அதனை அச்சுறுத்தவோ வேண்டாம் என்றும் வனத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

**********

## சேலம்

சேலம் மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாத மாணாக்கர் அரசு இசைப்பள்ளியில் இணைந்து சிறந்த எதிர்காலத்தை உருவாக்கி கொள்ளலாம் என இப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு.சங்கரராமன் தெரிவித்துள்ளார்.

- - வாய்ஸ் - -

- **********

## கோவில்

மதுரை அருள்மிகு கூடல் அழகர் பெருமாள் கோவில் வைகாசி தேர்திருவிழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

## கால்பந்து

ஹாங்காங்கில் நடைபெறும் ஆசிய கோப்பை கால்பந்து தகுதி சுற்று இறுதியாட்டத்தில் இந்திய ஆடவர் அணி இன்றுமாலை ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

**********

வாலிபால்

19 வயதிற்குட்பட்டோருக்கான வாலிபால் சேம்பியன் பட்ட போட்டிகள் உஸ்பெகிஸ்தான் தாஷ்கெண்டில் இன்று தொடங்குகின்றன.

இன்று நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் இந்தியா ஈரானை எதிர்கொள்கிறது.

நாளை கிர்கிஸ்தானுடன் மோதுகிறது.

**********